<u>**சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை**</u>

**OS.NO.253/2020** **தேதி.**20.01.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... பி.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு 20.01.2026ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | | திரு.வேதாத்ரி |
| த/பெ. | | திரு.தாமோதரராவ் |
| வயது | | 61/2026 |

துவக்க நேரம் 4.25 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–

1. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.த.சா.ஆ.10டன் இணைக்கப்பட்டுள்ள புல எண்.114க்கான புலவரைபடம் என்றாலும், இது வாலாஜா வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். இந்த வரைபடத்தில் சர்வே எண்.114/1 என்பது தாவா சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு கிழக்கில் சர்வே எண்.114/2 உட்பிரிவு செய்யப்பட்டுள்ளத என்றால் சரிதான். சர்வே எண்.114/2ன் மொத்த நிலம் ஏக்.01.88 நிலம் என்றாலும் இது 1ம் வாதி கண்ணனுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் சரிதான்.

2. தாவா சொத்து சர்வே எண்.114/1 ல் ஏக் 0.50 சென்ட் நிலம் என்றால் சரிதான். என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.த.சா.ஆ.3(வில்லங்க சான்று)ல் வழக்கு சொத்திற்கான நாற்புற எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், இந்த நாற்புற எல்லையில் 1ம் வாதி கண்ணன் நிலத்திற்கு மேற்கில் சர்வே எண்.114/1 தாவா சொத்து உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் பைமாஸ் நெம்பர் 94க்கான வில்லங்க சான்றிதழ் கேட்டு நான் விண்ணப்பம்

கொடுத்திருந்தேன், இதில் எனது பெரியப்பா பாஸ்கரராவ் , முனுசாமி பெயருக்கு கிரையம் கொடுத்துள்ளார். இதில் ஏக்.0.55 1/2 கீழ்பாகம் மட்டும் கிரையம் கொடுத்துள்ளார். சர்வே எண்.114/1ன் மேல் பாகம் எனது அப்பா தாமோதரராவ் பெயருக்கு ஏக்.0.55 1/2 நிலத்தை வருவாய்த்துறை பதிவேட்டில் பதிவு செய்துள்ளார்கள்.

3. முனுசாமி, பாஸ்கரராவ்விடம் கிரையம் வாங்கிய சொத்து, இந்த புலவரைபடத்தில் எங்குள்ளது என்று காண்பிக்க முடியுமா என்றால், சர்வே எண்.114/2–வுடன் இணைந்துள்ளது. சர்வே செய்யும்பொழுது சர்வேயர் எனக்கு தெளிவாக காட்டிவிட்டு சென்றுவிட்டார். சர்வே எண்.114/1ல் கீழ்புறமாக இருப்பதாக சொல்லும் ஏக்.0.55 1/2 நிலத்தை சர்வே எண்.114/2ல் இருப்பதாக தனியாக பிரித்து காட்டப்பட்டுள்ளதா என்றால், இல்லை.

4. தாஸில்தார், தாவா சொத்தை அளவீடு செய்ததாக நான் சொல்லும் நிலையில், வாதிகளுக்கு தாவா சொத்தை அளவீடு செய்வது குறித்து வட்டாட்சியர் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால், வாதிகள் அனுபவத்தில் இல்லை, அதனால் அவர்களுக்கு கொடுக்கவில்லை. தாவா சொத்திடம் வட்டாட்சியர் அளவீடு செய்ய வந்தபொழுது தாவா சொத்து குறித்து வழக்கு நிலுவையில் உள்ளதாக வழக்கு தொடர்பான ஆவணங்களை வாதிகள் வட்டாட்சியரிடம் கொடுத்ததால், வட்டாட்சியர் தாவா சொத்தை அளவீடு செய்யாமல் திரும்பி சென்றுவிட்டார் என்றால், சரியல்ல, தாவா சொத்தை அளவீடு செய்தார். நான் சொல்வது தவறு என்றாலும், தாவா சொத்தை வட்டாட்சியர் அளவீடு செய்யவில்லை என்றாலும், தாவா சொத்தை அளவீடு செய்யாமலேயே வட்டாட்சியர் அவரது அலுவலகத்தில் வைத்து நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.10 ஐ (முதல் பக்க மேலெழுத்து) எனக்கு தவறுதலாக வழங்கியுள்ளார் என்றாலும், சரியல்ல.

5. வாதிகள், தாவா சொத்தில் அனுபவத்தில் இருப்பதால்தான், வட்டாட்சியர் அளவீடு செய்ய வந்தபொழுது வாதிகள், அளவீடு செய்ய இருந்ததை தடுத்து வழக்கு நிலுவையில் இருப்பதை சொல்லி திருப்பி அனுப்பிவிட்டார்கள் என்றாலும், சரியல்ல, அளந்து கொடுத்துவிட்டு சென்றார்கள்.

6. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 ல் எனது பெரியப்பா பாஸ்கரராவ் என்பவர் 1ம் வாதியின் சகோதரர் முனுசாமிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில், வரதவுடையார், நாகம்மாள் இவர்கள் நிலத்திற்கு வடக்கு என்றுதான் குறிப்பிட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால், சரிதான். மொத்த விஸ்தீரனம் ஏக்.01.11 ஆக இருக்கும்பொழுது எழுதப்பட்டுள்ளது.

7. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 ல் உள்ள புலவரைபடத்தில் தென்புறமாக வரதவுடையார், நாகம்மாள் ஆகிய இருவரின் நிலங்களும் உள்ளதாக குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளதா என்றால், குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால், இது மொத்த விஸ்தீரணம் ஆகும். பி.வா.சா.ஆ.10 ன்படி சர்வே எண்.114/1 ன் மொத்த விஸ்தீரணம் 50 சென்ட் என்றால், சரிதான். சர்வே எண்.114/1 ன் மேற்கில் நகம்மாள் மற்றும் தச்சமானிய நிலமும் உள்ளது என்றால், இருக்கிறது. அதுதான் பார்டர்.

8. வரதவுடையார், நாகம்மாள் ஆகியோர்களிடம் அவர்களது நிலங்களை ஒரு கோவிந்தராஜ் என்பவர் கிரையம் பெற்றுள்ளார் என்றால், வாங்கியிருக்கலாம். மேற்கில் உள்ள நாகம்மாள் என்பவரிடமிருந்தும் அதே கோவிந்தராஜ் கிரையம் பெற்றுள்ளார் என்றால், வாங்கியிருக்கலாம். கோவிந்தராஜ், பிச்சாண்டி, பீமன் ஆகியோருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால், கொடுத்திருக்கலாம். பிச்சாண்டி, பீமன் ஆகியோர் கிரையம் பெற்ற இடத்தில் வீடு கட்டி தற்பொழுது குடியிருந்து வருகிறார்கள் என்றால், குடியிருப்பார்கள். மேற்கில் உள்ள தச்சமானிய நிலத்தை நரசிம்மாச்சாரி என்பவர் பாலு என்பவருக்கு கிரையம் கொடுத்து, அந்த இடத்தில் பாலு வீடு கட்டியுள்ளார் என்றால், சரிதான்.

9. பிச்சாண்டி மற்றும் பீமன் ஆகியோர் கிரையம் பெற்ற கிரைய ஆவணங்களின் படி, நான் தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றாலும், 1ம் வாதி கண்ணன்தான் தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளார் என்றாலும், அதனால்தான் 1ம் வாதி கண்ணன் சொத்திற்கு மேற்கில் பிச்சாண்டி, பீமன் கிரையம் பெற்ற நிலங்கள் உள்ளதாக குறிப்பிட்டு வா.சா.ஆ.10, 11 ன் சக்குபந்தியில் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது என்றாலும், தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் இருப்பதை தெரிந்து கொள்ளாமல் மேற்படி ஆவணங்களில் அறியாமையால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

10. பாலு என்பவர் கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்தில் (வா.சா.ஆ.12) 1ம் வாதி கண்ணன் நிலத்திற்கும் மேற்கில் கிரையம் வாங்கியதாக குறிப்பிட்டு கிரையம் பெறப்பட்டது என்றால், நான் அனுபவத்தில் இருப்பதை அறிந்துகொள்ளாமல் அறியாமையால் அவ்வாறு எழுதியுள்ளார். வா.சா.ஆ.10, 11, 12 ஆகிய ஆவணங்களில் வாதிகள்தான் தாவா சொத்தில் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்பதை உறுதி செய்து கொண்டுதான் மேற்கண்ட ஆவணங்கில் சக்குபந்தியில் 1ம் வாதியின் கண்ணன் நிலத்திற்கு மேற்கில் உள்ள சொத்தை கிரையம் பெறுவதாக குறிப்பிட்டு கிரையம் பெற்றுள்ளார் என்றாலும், நான் தாவா சொத்தில் எப்பொழுதும் அனுபவத்தில் இல்லாததால்தான் என் பெயரை குறிப்பிட்டு எழுதவில்லை என்றாலும், சரியல்ல.

ஆவணங்கள் பரிசீலிக்க வேண்டி, குறுக்குவிசாரணை ஒத்திவைக்கவேண்டப்பட்டது. வேண்டுகோள் ஏற்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம் 5.30 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.